**நிலைபேறான மின்வலு துறை ஆதரவளிப்பு செயற்திட்டம் பகுதி - 07 மற்றும் பகுதி – 08 - 2015**

நிலைபேறான மின்வலு துறை ஆதரவளிப்பு செயற்திட்டத்தின் பகுதி - 07 மற்றும் பகுதி - 08 இன் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 யூன் 20 ஆந் திகதிய 2733 - எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) இலக்க மற்றும் 2734 - எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) இலக்க கடன் உடன்படிக்கைகளின் IV ஆம் உறுப்புரையின் 4.05(அ) மற்றும் 4.03(அ) பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளது. இலங்கை மின்சாரசபை செயற்திட்டத்தின் பகுதி - 01 தொடக்கம் பகுதி - 06, பகுதி - 09 மற்றும் பகுதி - 10 இன் அமுல்படுத்தல் முகவராக உள்ள அதேவேளை செயற்திட்டத்தின் பகுதி - 07 மற்றும் பகுதி -08 இற்கு இலங்கை நிலைபேறான எரிசக்தி அதிகாரசபை அமுல்படுத்தல் முகவராக உள்ளது. செயற்திட்டத்தின் பகுதி - 07 மற்றும் பகுதி - 08 கீழ் இலங்கை நிலைபேறான எரிசக்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மீதான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (i) கிழக்கு, வடமத்திய, தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களில் பரிமாற்ற முறைமையினை வலுப்படுத்துதல் (ii) கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் விரிவுபடுத்தப்பட்ட கிராமப்புற மின்மயமாக்கல் மற்றும் (iii) மேம்படுத்தப்பட்ட வினைத்திறனான எரிசக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தியின் மேலதிக அபிவிருத்தியினூடாக, நம்பகரமான, போதுமான மற்றும் மலிவான மின்சக்தி வழங்கலை விரிவடையச் செய்தல் மற்றும் சேவையில் நம்பிகத்தன்மை மற்றும் வினைத்திறனை முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம்,

செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 18,135 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 162.03 மில்லியனானதுடன், அதில் ரூபா 216.16 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 1.93 மில்லியன் அல்லது 1.19 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிப்பு செய்யப்பட வேண்டுமென இணங்கப்பட்டது. 2011 நவம்பர் 17 இல் செயற்திட்டம் அதனது செயற்பாடுகளினை ஆரம்பித்திருந்ததுடன் 2014 ஏப்ரல் 30 இல் பூர்த்தியாக்குவதற்கு பட்டியல்படுத்தப்பட்டதுடன் கடன் காலப்பகுதி 2016 ஒக்தோபர் 30 வரை நீடிப்புச் செய்யப்பட்டது.

**1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான

கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப் பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட முன்னேற்ற நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் உதவி வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், கட்டுநிதிக் கணக்குகலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரணமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்ததா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்,

(எ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஔ) கடன் உடன்படிக்கைகளில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து இதுவரை தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக மீளளிப்புக்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமாக அமைந்திருந்தன என நம்பகரமாக திருப்திப்பட முடியும் என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய எம்ஔவ்பீ/ஈஆர்டீ/2007/2 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டங்களின் நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 யூலை 19 இல் மாத்திரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 01 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தலின் 19 ஆம் பந்தியினால் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதிக்கூற்றுக்களின் தயாரிப்புக்கு முகாமைத்துவம் பொறுப்பு என்ற கூற்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சுற்றுச்சூழல் விளைவுகள் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகளின் பரிட்சிப்புக்கு ரூபா 41.81 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் மூலதனமாக்கப்படுவதற்குப் பதிலாக நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்திற்கு இலங்கை மத்திய வங்கியால் பேணப்பட்ட கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் இல் உள்ளபடியான மீதி ரூபா 20 மில்லியன் தொடர்ந்தும் காணப்பட்டதுடன் நிதிக் கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான மற்றும் மீளாய்வாண்டின் போது நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் நிதியளிப்பதற்கு இனங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற் கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஏடீபி | 1.93 | 216.16 | 125.00 | 0.02 | 2.90 | 0.28 | 38.60 |
| ஜீஒஎஸ்எல் | 0.09 | 10.01 | 1.00 | - | 0.20 | 0.05 | 7.50 |
| **மொத்தம்** | **2.02** | **226.17** | **126.00** | **0.02** | **3.10** | **0.33** | **46.10** |

**3.2 பௌதீக செயலாற்றல்**

செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம், எரிசக்தி வினைத்திறன் மீதான முன்னேற்றங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களின் அபிவிருத்தி என்பன செயற்திட்டம் பகுதி - 07 மற்றும் பகுதி - 08 இன் எதிர்பார்க்கப்பட்ட பிரதான வெளியீடுகளாகக் காணப்பட்டன. ஆகையினால், விபரமான தொழில்நுட்ப கற்கைகளினை மேற்கொள்வதற்கான ஆலோசனை உதவிகள் மற்றும் நுண் - நீர் (Micro hydro) புனர்வாழ்வு நிதியளிப்பு நோக்கங்களுக்கான தகுதி அளவுகோல்களின் அபிவிருத்தி மற்றும் தோட்ட துறைக்கான கம்பி இணைப்புக்கள் போன்ற செயற்பாடுகள் செயற்திட்டத்தினால் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. மேலும், பொறியியல் மீதான மதிப்பீடுகளின் ஏனைய செயற்பாடுகள், சுற்றுச்சூழல் மற்றும் சமூக கண்காணிப்பு விடயங்கள், தேறிய அளவிடல் அடிப்படையொன்றில் 1.3 மெகாவாட் (Megawatt) கம்பி இணைக்கப்பட்ட கொள்திறன் வழங்குகைக்கு 19 நுண் - நீர் செயற்திட்டங்களின் தனியார் மேம்பாட்டாளர்களுக்கு ஐ.அ.டொலர் 1.29 மில்லியன் பெறுமதிக்கு கடன் வழியினை ஸ்தாபித்தல் மற்றும் ஒளியூட்டும் பயன்பாட்டிற்கான பரிசோதனை ஆய்வுகூட உபகரணங்களின் கொள்வனவு கூட மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தினால் நியமிக்கப்பட்ட ஆலோசகர் ஒருவரினால் சத்தியவள அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, 02 அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீது உப - கடன்களினைப் பெறுவதற்கு 2015 திசெம்பர் 31 வரையேனும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தின்

செயற்பாடுகளின் அமுல்படுத்தல்களில் தாமதமான முன்னேற்றம் காரணமாக, கடனினை மூடுவதற்கு 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான மிதமாகவுள்ள 10 மாதங்கள் காலப்பகுதியின் போது செயற்திட்டத்தின் நோக்கங்களினை அடைந்துகொள்ள முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.3 நிதிசார் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

நிதிப் பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 இன் 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையினால் வேண்டப்பட்டவாறு, நிலைபேறான எரிசக்தி அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.